வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 1030 /ஆ2/2023 . நாள் : 06.03.2023.

பொருள்: நம்ம School நம்ம ஊரு பள்ளி – மாவட்டங்களில் சமூக பங்களிப்பு நிதி (CSR) மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகளை நம்ம School நம்ம ஊரு பள்ளி இணையதளம் வாயிலாக மட்டுமே பெறுதல் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை: நம்ம School நம்ம ஊரு பள்ளி உறுப்பினர் செயலாளரின் செயல்முறைகள் பிறப்பிப்பவர் திரு.இரா.சுதன், இ.ஆ.ப.(ஓய்வு), ந.க.எண்.002/ஆ6/ /நஊப/2023, நாள். 28.02.2023.

#######

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க வேலூர் மாவட்டத்தில் நம்ம School நம்ம ஊரு பள்ளி மாவட்டங்களில் சமூக பங்களிப்பு நிதி (CSR) மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகளை நம்ம School நம்ம ஊரு பள்ளி இணையதளம் வாயிலாக மட்டுமே பெறுதல் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குவது தொடர்பாக, வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தின் மூலமாக 01.03.2023 அன்று மின்னஞ்சலில் விளக்கமான பார்வைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பின்பற்றி செயல்படுமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நம்ம School நம்ம ஊரு இணையதளத்தின் முக்கியத்துவத்தை அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அறியும் வண்ணம் தக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பள்ளி மேலாண்மைக்குழு வாயிலாக பொதுமக்கள் அனைவரும் இதை அறிந்து பள்ளிகளின் முன்னேற்றத்திற்காக உதவிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

பெறுநர்

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,வேலூர்–6.
   (தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது)
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்,
3. அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
   அரசு /அரசு உதவி பெறும்/ தனியார் பள்ளிகள், வே.மா.

நகல்

நம்ம School நம்ம ஊரு பள்ளி உறுப்பினர் செயலாளர்–
பிறப்பிப்பவர் திரு.இரா.சுதன், இ.ஆ.ப.(ஓய்வு), அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

//ப.த.//